**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE UNIT OF M/S. VENKATAKRISHNAN RED EARTH QUARRY AT S.F.No.70/2,70/3, 70/4, 70/5A, &71/3,KONDALANKUPPAM VILLAGE, VANUR TALUK, VILLUPURAM DISTRICT ON 04.07.2023 AT M/S. DHANALAKSHMI MAHAL, KARASANUR VILLAGE, VANUR TALUK, VILLUPURAM DISTRICT.**

**Present:**

1. **Tmt.M.Parameswari** :District Revenue Officer, Viluppuram District
2. **Thiru.Er.M.Selvakumar** :District Environmental Engineer Tamil Nadu Pollution Control Board Viluppuram

**The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Viluppuram.**

The District Environment Engineer welcomed the District Revenue Officer, Government Officials, General Public, Friends from the Press and Owner, consultant of the project who have come for the meeting, being conducted for getting environmental clearance for M/s. Venkatakrishnan Red Earth Quarry.

The public hearing meeting for M/s. Venkatakrishnan Red Earth Quarryat S.F.No.70/2,70/3,70/4,70/5A &71/3,Kondalankuppam Village, VanurTaluk, Villupuram Districtis being conducted based on EIA Notification dated: 14.09.2006 published by Ministry of Environment and Forest ,Climate Change New Delhi.

Press release for the public hearing meeting is published in Daily Thanthi and The New Indian Express newspapers dated on 03.06.2023 with the approval of the District Collector, Villupuram for conducting of public hearing meeting on 04.07.2023 at 12.30 PM.

In this regard, District Environmental Engineer, requested to express their views one by one in a peaceful manner and also in writing.

Further District Environmental Engineer asked the project consultant to present the project details.

**Technical Presentation, Dr. Vijay Prabu, EIA Co-or. Jio Technical Mining Solution, Chennai.**

Dr. Vijay Prabu, Project Consultant, EIA Co-or. Jio Technical Mining Solution, Chennai, has presented the details of the project of M/s. Venkatakrishnan Red Earth Quarry through power point presentation.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board,Viluppuram.**

He requested the public to inform their name and village before speaking to express their suggestions, concerns and queries about this project. He assured that their views will be recorded and forwarded to the State Environment Impact Assessment Authority.

**1.Mr. Balakrishnan, Kondalankuppam Village**

He informed that,

He welcomed all gatherings who came to the public hearing meeting for the Red Earth quarry in Kondalanguppam village and stated that he will get employment for the upcoming project . We are all having lorry dipper and the same will be helpful for the lorry drivers residing in our village which cause benefits to our village.

Only one request is to cover the lorry with tarpaulins so as to avoid accidents due to dust pollution

**2.Mr. V.C. Arumugam, MaavattaVanniyarSangaThalaivar, Villupuram**

He informed that,

There are more than 10 red quarries located in this area also there are more than 150 stone crusher units, 20 quarries and 5 black granite quarry. All of them were completelyviolating the government rules. No actions have been taken so far? Most of the blue metals, quarries and red earth quarries were mining more than the permissible limit also toan extent of below 100 m from theground level. Most mining are carried out in the Government land.

On behalf of PasumaiThayagam , we are doing various awareness programme like planting tree sapling, restoration of pondsand lakes. But they are destroying the nature. No one is aware about the deceased people those whofell into the quarry pit. He asked to take action against this. Huge protest will be taken if this continue.

**3.Mr. Prabakaran, Kondalankuppam Village**

He informed that,

We hope that establishing of this red earth quarry will provide employment opportunities to many educated and uneducated people. We hope this will be a good scheme for people below poverty line. While transporting the soil by truck on the road, it should be covered with tarpaulin and water should be sprayed to contain dust pollution. He also requested that it would be good and safe to plant saplings like be palm trees around the lake.

**4.Mr. Boobalan, Kondalankuppam Village.**

He informed that,

He stated that employment opportunities will get due to establishment of this red quarry and also stated that there is a chance of accident that may happen due to overload in the school timings without covering tarpaulin. He requested to cover the truck with tarpaulin to contain dust pollution.

**5.Mr. Munusamy, KondalankuppamVillage**

He informed that,

We hope that establishment of Red Earth Quarry in this village will definitely be good for us. Hence we welcome this quarry.

**6.Mr. Nakkeran, Kondalankuppam Village**

He informed that,

We hope that employment opportunities will get due to upcoming of this red quarry. He requested to provide basic facilities to their village.

**7.Mr. Ravichandran, Kadagampattu Village**

He informed that,

We hope that many people will get employment through this project, so we welcome this project

**8.Mr. Parthipan, Thollamur Village**

Kondalangkuppam is located nearer to the Thollamur village. Kondalangkuppam habitation is located at the higher elevation. Due to deep mining of the sand / stone quarrythere is a possibility of causalities that may happen while children bathing in the pit.. Moreover cattle feeds also affected due to the same problem and could not be saved. He requested the quarry owner to operate without any damage to the village.

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Viluppuram.**

On behalf of the Tamil Nadu Pollution Control Board, he thanked the District Revenue Officer and all the general public for attending the meeting.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Daily Newspaper Tamil & English) for notifying the public hearing meeting.
2. Copy of attendance sheet of the public hearing (Total pages 8 & 97 persons).
3. Copy of Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Villuppuram.

District Revenue Officer,
Villupuram.

**விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கொண்டலாங்குப்பம் கிராமம், புல எண். 70/2, 70/3, 70/4, 70/5A, 71/3 ல் தி/ள். B. வெங்கட கிருஷ்ணன் செம்மண் குவாரி நிறுவனத்தின் திட்ட பணிக்கு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் 04.07.2023 அன்று காலை 12.30 மணியளவில் தி/ள்.தனலட்சுமி மஹால், கரசானூர் கிராமம், வானூர்வட்டம், விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைவிபரம்:**

பங்கேற்றோர்:

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. M. பரமேஸ்வரி | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>விழுப்புரம். |
| 2. | Er. மு. செல்வகுமார் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கொண்டாலங்குப்பம் கிராமம், ச.எண். 70/2, 70/3, 70/4, 70/5A, 71/3ல் 1.53.5 ஹெக்டேர் பரப்பளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்ட தி/ள்.B. வெங்கடகிருஷ்ணன் செம்மண் குவாரி நிறுவனமானது செம்மண் குவாரியை இயக்குவதற்குமாநில சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுசூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் இன்று நடைபெற உள்ளது.

சுற்றுசூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006ன்படி5.00ஹெக்டேர் பரப்பளவிற்கு மண்வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதிபெற பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூகநல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். B. வெங்கடகிருஷ்ணன் செம்மண் குவாரி பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள்.தனலட்சுமி மஹாலில் 04.07.2023 அன்று முற்பகல் 12.30 மணியளவில் நடைபெறுமென திநியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்

மற்றும் தினத்தந்தி செய்தி தாள்களில் 03.06.2023 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவித்துக்கொள்ளலாம் என கேட்டுக்கொண்டார்.

<u>தொழில்நுட்ப விளக்கம் Dr. விஜய்பிரபு, EIA Co-or., Jio Technical Mining Solution, சென்னை</u>

திட்ட ஆலோசகர், திரு. B. வெங்கடகிருஷ்ணன் செம்மண் குவாரி திட்டம் தொடர்பாக விளக்கவுரையை எடுத்துரைத்தார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்</u>

பொதுமக்கள்தங்கள்பெயர், ஊரின்பெயர்ஆகியவற்றைகுறிப்பிட்டுதங்கள்கருத்துக்களைதெரிவிக்கலாம். தங்களுடையகருத்துகளைமுறையாகபதிவுசெய்துமாநிலசுற்றுச்சூழல்தாக்கமதிப்பீட்டுஆணையத்திற்குஅனுப்பிவைக்கப்படும்என்பதைதெரிவித்துக்கொண்டார்.

1. <u>திரு. பாலகிருஷ்ணன், கொண்டலாங்குப்பம்,கிராமம்</u>

இவர்கூறுகையில்,

கொண்டலாங்குப்பம் கிராமத்தில் செம்மண் குவாரி அமைப்பதற்கு பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு வந்த அனைவருக்கும் வணகத்தை தெரிவித்து, இந்தகூட்டத்தின் மூலமாக எங்கள் ஊருக்கு செம்மண் குவாரி வருவதால், எங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்று தெரிவித்தார். நாங்கள் லாரி டிப்பர் வைத்திருக்கிறோம். குவாரி அமைவதினால் ஓட்டுனர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. இதனால் எங்கள் ஊருக்கு நல்லது நடக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஒரே ஒரு கோரிக்கை என்னவென்றால், லாரி போகும் போது பின்னாடி வரும் வாகன ஓட்டிகளுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. தார்பாய் போடாமல் செல்வதால் மண்கள் கண்ணில் விழுந்து விபத்து ஏற்படுகிறது. எனவே லாரி பின்னாடி வருபவர்களுக்கு எந்தவொரு தொந்தரவும் இல்லாமல் இயக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார்.

2. V.C. ஆறுமுகம், மாவட்ட வன்னியர் சங்கத் தலைவர், விழுப்புரம்

இவர் கூறுகையில்,

இந்த பகுதியிலேயே ஏறத்தாழ 10க்கும் மேற்பட்ட செம்மண் குவாரி இருக்கிறது. 150க்கும் மேற்பட்ட கல் உடைக்கும் தொழிற்சாலை இருக்கிறது. 15 முதல் 20க்கும் மேற்பட்ட குவாரிகள் இருக்கிறது. 5க்கும் மேற்பட்ட கருப்பு கல் குவாரி இருக்கிறது. அவை அனைத்தும் சட்டத்திற்கு புறம்பாகவும், அரசு விதிகளை 100 சதவீதம் மீறியும் நடந்து கொண்டிருக்கிறது. எந்தவொரு விதிகளுக்குட்பட்டும் ஒரு செம்மண் குவாரியும் நடப்பதில்லை. ஏன் நடவடிக்கை எடுக்க தயங்குகிறீர்கள்? குவாரிகள், புளுமெட்டல் மற்றும் செம்மண் குவாரிகள் அனைவரும் அனுமதிக்கப்பட்ட அளவைவிட 1 மீட்டர், 2 மீட்டருக்கு பதிலாக 100 மீட்டர் ஆழத்திற்கு கல், மண் எடுக்கிறார்கள். அரசு இடத்தில் செம்மண் எடுக்கிறார்கள். ராமராஜன் என்பவர் ரங்கநாதபுரம் மற்றும் தொள்ளாமூரில் 6 ஏக்கர் பரப்பளவில் குவாரியை லீசிற்கு எடுத்தார். ஆனால் அவர் கொண்டலாங்குப்பம் பகுதியில் அனுமதியின்றி 2 ஏக்கர் பரப்பளவில் செம்மண் எடுத்துள்ளார். அவர் மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை ஏன்? என கேட்டார்.

நாங்கள் பசுமை தாயகம் சார்பாக நிறைய பள்ளிகளில் மரக்கன்றுகள் நடுகிறோம். நாங்கள் குளங்களையும் ஏரிகளையும் தூர் வாருகிறோம். ஆனால், இவர்கள் செயற்கையாக ஏரிகளை உருவாக்கி மக்களுக்கு பாதுகாப்பற்ற ஒரு சூழலை உருவாக்கி கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ பேர் செம்மண் குவாரி பள்ளத்தில் விழுந்து இறக்கிறார்கள். இது வெளியே தெரிவதில்லை. இதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மீண்டும் இது போல நடந்தால் கட்சியின் அனுமதி பெற்று மிகப்பெரிய ஒரு போராட்டம் நடத்துவோம் என்று தெரிவித்துக்கொண்டார்.

3. திரு. பிரபாகரன், கொண்டலாங்குப்பம்

இவர் கூறுகையில், இந்த செம்மண் குவாரி வருவதால் படித்த மற்றும் படிக்காத நிறைய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறோம். வறுமை கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு இது நல்ல திட்டமாக அமையும் என்று நம்புகிறோம். சாலையில் லாரியின் மூலம் செம்மண் ஏற்றி செல்லும்போது பாதுகாப்புடன், தார்பாய் அமைத்து, தண்ணீர் தெளித்து காற்று மாசு அடையாமல் எடுத்து செல்ல வேண்டும். மேலும்,

ஏரிக்கு அருகில் உள்ள இடங்களில் மற்றும் ஏரியை சுற்றி மரக்கன்றுகள், பனை மரங்கள் அமைத்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டார்.

4. திரு. பூபாலன், கொண்டலாங்குப்பம் கிராமம்

இவர் கூறுகையில்,

இந்த செம்மண் குவாரி வருவதால் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும், பள்ளி நேரங்களில் லாரிகளில் அதிகமான மண், கற்கள் ஏற்றிக்கொண்டு தார்பாய் போடாமல், வேகமாக செல்வதால் காற்று மாசு ஏற்பட்டு விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஏனவே, தார்பாய் அமைத்து காற்று மாசு ஏற்படாமல் எடுத்து செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

5. திரு. முனுசாமி, கொண்டலாங்குப்பம் கிராமம்

இவர் கூறுகையில்,

இந்த ஊரில் செம்மண் குவாரி வருவது கண்டிப்பாக எங்களுக்கு நல்லதாக இருக்கும் என்று நம்புகிறோம். ஆகையால் நாங்கள் இதை வரவேற்கிறோம் என்று சொன்னார்.

6. திரு. நக்கீரன், கொண்டலாங்குப்பம் கிராமம்

இவர் கூறுகையில்,

இந்த ஊரில் செம்மண் குவாரி வருவதால் எங்கள் ஊர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், எங்கள் ஊர் வளர்ச்சி அடையும் என்றும் தெரிவித்தார். இந்த செம்மண் குவாரி மூலம் எங்கள் ஊருக்கு அடிப்படை வசதிகள் கிடைக்க வேண்டுமென்று ஊரின் சார்பாக கேட்டுக்கொண்டார்.

7. திரு. இரவிச்சந்திரன், கடகம்பட்டு கிராமம்

இவர்கூறுகையில்,

இத்திட்டத்தின் மூலமாக பல மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன், அதனால் நாங்கள் இந்த திட்டத்தை வரவேற்கிறோம் என்று தெரிவித்தார்.

8. திரு. பார்த்திபன், தொள்ளமூர் கிராமம்

இவர் கூறுகையில்,

கொண்டலாங்குப்பம் கிராமமானது தொள்ளமூர் கிராமத்திற்கு அருகில் உள்ளது. கொண்டலாங்குப்பம் பகுதியின் மக்கள் வாழ்விடம் மேட்டுப்பகுதியில் உள்ளது. கொண்டலாங்குப்பம் பகுதியில் உரிமம் கொடுக்கும் குவரிரிகள் தொள்ளாமூருக்கு அருகில் தான் உள்ளது. அங்கு பள்ளம் உடைப்பு ஏற்பட்டாலோ அல்லது அதிகப்படியான ஆழம் ஏற்பட்டாலோ சிறியவர்கள் குளிப்பதால் பள்ளத்தில் உள்ள சேற்றில் சிக்கிக்கொள்ளும் சூழல் உள்ளது. ஆடு, மாடு மேய்க்கும் போதும், அதில் விழும் ஆடு மற்றும் மாடுகளை காப்பாற்ற முடியாத சூழலில் இருக்கிறது. அந்த கிராமத்தில் உள்ளவர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம்

கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், பொதுமக்கள் அனைவருக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்சார்பில் நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

இணைப்பு:

1. பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் வருகை பதிவேடுநகல் (மொத்த பக்கம் 8 மற்றும் நபர்கள் 100)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு நகல்

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம்.

மாவட்டவருவாய்அலுவலர்,
விழுப்புரம்.